1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பதியதலாவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10(1) உபபிரவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதியதலாவ பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, கட்டுப்படுத்தும் தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப்

பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுக்ள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டு கொள்கைகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகள் என்னவென்பது பற்றிய குறிப்பொன்றை நிதிக்கூற்றுக்ளுடன் சமர்ப்பித்திருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கிறேன். 2025 திசெம்பர் 31 நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படுவதென.	நிதிக்கூற்றுக்களுடன் அவை தயாரிப்பதற்கு பின்பற்றிய கணக்கீட்டு கொள்கையை வெளிப்படுத்தப்பட வேண்டும்.

1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் மாகாண அபிவிருத்தி உதவி செயற்திட்டம் மற்றும் மாகாண விஷேட அபிவிருத்தி பிரதான செயற்திட்டங்களிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 33,913,848 பெறுமதியான நிர்மாணங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆண்டில் அந்த பெறுமதியை மூலதனமாக்க நடவடிக்கை எடுப்தென.	மூலதன செலவினம் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவெண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 1,250,000 தொகை கணக்கீடு செயதிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கிறேன். நிலையான வைப்பு முதிர்ச்சியடைந்து வட்டி 2026 இன் போது கிடைத்தால் உள்ளடக்கப்படுவதென	வட்டி வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(இ)	மீளாயடவாணடில் மாவட் செயலகத்திலிருந்து மற்றும் மாகாண உதவி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து கிடைத்த உதவியின் மீது கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கிறேன். 2024 ஆண்டின் போது அன்பளிப்பாக கிடைத்த கணனி மற்றும் அச்சுப்பொறியின் பெறமதியை புத்தகங்களிற்கு உட்படுத்தி	சபைக்கு கிடைக்கும் சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.

		இருக்கவில்லை. 2025 ஆண்டின் இறுதி கணக்கில் ஜர்னல் குறிப்பு மூலம் உட்படுத்துவதென.	
(ஈ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண அபிவிருத்தி உதவி கருத்திட்டங்களிற்குரியதாக நிலவிய வங்கி கணக்கில் ரூபா 1,608,748 ஆன மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கிறேன். இந்த ஆண்டில் இடமாற்றம் பெற்று வந்த பயிற்ச்சியற்ற உத்தியோகத்தர்களினால் இறதி கணக்கை தயாரிக்கப்ட்டதனால் குறைபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என.	சபைக்கு சொந்தமான அனைத்து வங்கி கணக்குகளின் மீதி சரியாக கணக்கீடு செய்ய வெண்டும்.
(உ)	2023 ஆணடுக்கரியதாக பெற வேணடிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 308,000 தொகையை கணக்கீடு செய்திருக்கவில்லை.	நீதிமன்ற தண்டப்பண வருமானமான ரூபா 308,000 தொகை கைவிடப்ப்டுள்ளதென.	பெற வேண்டிய வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.

1.6.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	03 கணக்கு விடயங்களிற்கு உரியதாக மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதி அட்டவணை பிரகாரம் மீதி மற்றும் நிதிக்கூற்றுக்கள் பிரகார 03 மீதிகளிற்கிடையே ரூபா.17,467,909 ஆன வித்தியாசம் காணப்பட்டது.	ரூபா 17,100 தொகை காட்டப்பட்டிருந்தது 2024 ஆண்டில் கிடைத்த நூலக வைப்பு அளவாகும். 2024 சனவரி 01 மீதி ரூபா 157,215 மற்றும் 2024 திசெம்பர் 31 174,315 ஆகும். LDSP கணக்கு மீதி ரூபா 1,609,248 ஆகுமென.	இணங்காமைக்கான காரணத்தை கண்டு சரிசெய்ய வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆண்டினுள் உருவாக்கிய தேறிய காசுப் பாய்ச்சலின் சரியான பெறுமதிக்கு ஆண்டின் ஆரம்ப காசு மற்றும் சாசுக்கு சமமானவற்றை கூட்டிய பின்னர் பெறுமதி மற்றும் ஆண்டிறுதி காசு மற்றும் காசுக்கு சமமானவற்றிகு இடையே ரூபா 16,086,925 ஆன இணக்கமின்மை காணப்பட்டது.	ஏற்றுக் கொள்கிறேன். பயிற்றப்படாத உத்தியோகத்தர்களினால் இறுதிக் கணக்கு தயாரிக்கப்பட்டதால் குறைபாடு ஏற்பட்டுள்ளது.	காசுப் பாய்ச்சல் கூற்றை சரியாக தயாரிக்க வேண்டும்.

1.6.4 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுக்களில் காட்டியிருந்த கூட்டுத் தொகை ரூபா 687,667,170 பெறுமதியான	மிதிகள் பல ஆண்டுளாக நிலவிவரும் மீதிகளாகும.	நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் கணக்கு

12 காணக்கு விடயங்கள் தொடர்பாக காணி உறுதி, அட்டவணை, ஆதன கணிப்பீடறிக்கை, மீதி உறுதிப்பாடு மற்றும் நாளாதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்து பதிவேடு சமர்ப்பிக்கப்படாததால திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை.		மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதி			
	(i) விதி 5 (xii)	நிதி மற்றும் களஞ்சிய செயற்பாடுகள் தொடர்பாக பொறுப்பானவர்களிடம் இருந்து பிணை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென.	நிதி மற்றும் நிருவாக விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
	(ii) விதி 218	சபைக்கு சொந்தமான அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டுகளிற்கு ஒரு முறை ஏனும் பரீட்ச்சிப்பு செய்யப்பட நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென.	நிதி மற்றும் நிருவாக விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2016 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி	வாகனங்களின் எரிபொருள் பயன்பாட்டை பரீட்சிக்க வேண்டிய போதும் சபைக்கு சொந்தமான 14 வாகனங்கள் தொடர்பாக சபையினால் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதென.	சுற்றிக்கை பிரகாரம் நடவடிக்ககை எடுக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2024 திசெம்பர் 31 திகதியுடள் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,746,295 ஆனதுடன்,

அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,913,718 ஆனது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

தலைவரின் சமர்ப்பிக்கப்ட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

	வருமான மூலங்கள்	2024				2023			
		மதிப்பிடப் பட்ட வருமானம்	பில்லிட்ட வருமானம	சேகரித்த வருமானம்	திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை	மதிப்பிடப் பட்ட வருமானம்	பில்லிட்ட வருமானம	சேகரித்த வருமானம்	திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை
		(ரூபா)	(ரூபா)	(ரூபா)	(ரூபா)	(ரூபா)	(ரூபா)	(ரூபா)	(ரூபா)
i.	வீதவரி மற்றும் வரி	236,000	294,000	194,540	99,460	206,000	202,250	202,250	-
ii.	வாடகை	6,967,000	7,248,474	7,386,111	1,934,076	7,182,000	6,182,302	6,153,712	1,924,114
iii.	அனுமதிப்பத்திர கட்டணம்	484,000	692,700	1,441,392	475,608	322,000	484,325	484,325	-
iv.	ஏனைய வருமானம்	1,173,500	1.173,500	3,118,967	24,115	2,464,000	2,047,186	2,047,186	24,115
		-------------	-------------	-------------	------------	-------------	-------------	-------------	-----------
	கூட்டுத்தொகை	**8,860,500**	**9,408,674**	**12,141,010**	**2,533,259**	**10,174,000**	**8,916,063**	**8,887,473**	**1,948,229**
		=======	======	=======	======	=======	======	======	======

2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையின் வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா 1,934,076 ஆனதுடன் அது 2017 முதல் 2024 வரையான காலத்திற்கு உரியதாக அறவிட வேண்டியதாக காணப்பட்டது.	ஏற்றுக் கொள்கிறேன். நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் கடையறைகளை மீண்டும் சுவீகரிக்க மற்றும் முத்திரை இட்ட கடையறைகளை மீண்டும் டென்டர் வழங்க நடவடிக்கை எடுத்துவருவதெனை.	நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கொடுப்பனவை புறக்கனிப்பவர்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2024 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 369,667 ஆனது.	பதில் வழங்கப்படவில்லை.	நிலுவை வருமானத்தை அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளல்

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 3 பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், பொது மக்களின் நல்வாழ்வு, வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபை சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் துணைச் சட்டம் விதிக்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 2024 திசெம்பர் 31 திகதி வரை 05 துணைச் சட்டங்கள் மாத்திரம் விதிக்கப்பட்டிருந்தன.	எதிர்காலத்தில் துணைச் சட்டம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும். எம்மால் இனங்காணப்பட்ட விடயங்களிற்காக துணைச் சட்டம் விதிக்கப்பட்டுள்ளது.	துணைச் சட்டங்கள் விதிக்கப்ட்டு சபையின் நடவடிக்கைகளை சட்டரீதியாக்க வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பதியதலாவ பிரதேச சபையினால் கிரிவான பிரதேசத்தில் நடாத்திச் செல்லும் திண்ம்க் கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு 1988 இன் 56 மற்றும் 2000 இன் 53 சட்டங்களால் திருத்தப்பட்ட 1980 இன் 47 இலக்க சுற்றாடல் சட்டத்தின் கீழ் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய போதும், சுற்றாடல அனுமதிப்பத்திரம் பெறாமல் திண்மக் கழிவு நிலையத்தை நடாத்திச் செல்லப்பட்டிருந்தது.	மஹவெலி அலுவலகத்தின் மூலம் நிலஅளவை பிரதி வழங்கப்பட்ட உடனே அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென.	விரைவில் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை வேண்டும்.
(ஆ)	2023 ஆண்டில் விபத்திற்குள்ளான பிரதேச சபைக்குரிய கெப் வண்டி இந்த அறிக்கை திகதி வரை குண்டசாலை ஒடோ மொபயில் நிறுவனத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. குறித்த நிகழ்வு நடந்து இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள போதும் அந்த நிகழ்வு தொடர்பாக நிதிப் பிரமாணம் 101 மதல் 110 வரையான பிரமாணம் பிரகாரம் நடவக்கை எடுத்திருக்கவில்லை.	புலனாய்வு இடம்பெற்று வருவதென.	நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபை நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பெறுமதி ரூபா 676,235,437	எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென.	சபைக்கு சொந்தமான நிலையான

	ஆன காணி கட்டிடம், இயந்திர உபகரணங்கள் மற்றும் தளபாட பொருத்துக்கள் ஆகிய நிலையான சொத்துக்கள் வகைப்படுத்தலின் பிரகாம் அட்டவணை தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு உருப்படி பிரகாரம் பெறுமதியை இனங்காண்டு நிலையான சொத்து பதிவேடுகளில் உள்ளடக்கி இருக்கவில்லை.		சொத்துக்கள் பதிவேட்டிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	பிரதேச சபைக்குரிய 36 மயானங்களின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.	மதிப்பீட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளதென.	பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(இ)	சபைக்கு சொந்தமான 08 வாகனங்களை திருத்த அல்லது திருத்த முடியாத வாகனங்களை குறித்த நிறுவனத்திற்கு ஒப்படைத்து ஏலத்தில் விற்பனை செய்ய சபையினால் செயற்பட்டு இருக்கவில்லை.	எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென.	பாவனையிலிருந்து அகற்ற அல்லது ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	2018 சனவரி 24 இன் 02/2018 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 2 முதல் 6 வரையான பந்திகள் மற்றும் 2023 நவம்பர் 30 இன் 02/2018 (i) இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின 2 முதல் 4 வரையான பந்திகள் பிரகாரம் நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் மனிதள அபிவிருத்தி திட்டத்தை வருட ஆரம்பத்தில் தயாரிக்க வேண்டிய போதும் பிரதேச சபையினால் வருட ஆரம்பத்தில் அவ்வாறான திட்டமொன்றை தயாரித்து செயற்படுத்தியிருக்கவில்லை.	2025 ஆண்டிற்கு மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை தயாரிப்பதென.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டு இறுதி வரை 06 சபை பதவிகளில் 08 வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் அங்கீகார பதவியணியை விஞ்சி ஒரு வருமான பரிசோதகர் பதவி மிகை காணப்பட்டது.	பதில் வழங்கப்படவில்லை.	வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மிகை ஊழியர்களை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் மரணித்த இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து மற்றும் இடமாறிச் சொன்ற ஒரு உத்தியோகத்தரிடமிருந்து கூட்டுத்	ஒருவரின் ரூபா 213,250 தொகையை மரண பணிக்கொடையில் இருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதுடன், மற்றவரின் கடன்	நிலுவை கடன் தொகையை விரைவில் அறவிடுவதற்கு

தொகை ரூபா 226,570 ஆன கடன் மீதிகள் ஆண்டு 02 முதல் 05 இங்கும் அதிக காலமாக அறவிடப்படாது காணப்பட்டன.	மீதி தொடர்பாக அலுவலகத்திலுள்ள பதிவெடுகள் பிரகாரம் இது வரை எந்தவித தகவல்களையும் கண்டறிய முடியவில்லை. எதிர்காலத்தில் சரிசெய்து கொள்ள நடவடிக்கை எடுப்பதென.	நடவடிக்கை எடுக்க வேண்டும்..

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவின் மற்றும் நிதிப்பிரமாணம் 133(1) பிரகாரம் உள்ளக கணக்காய்வு மூலம் நிருவன அனைத்து செயற்பாட்டுகளும் மேவுகை செய்யப்படும் வகையில் நிறுவனத்தின் செயற்பாடு நடவடிக்கைகளை மேம்படுத்த மற்றும் பணிகளை உயர்த்துவதற்கான பரிந்துரைகளை தயாரிக்கப்ட்டு அமுல்படுத்தியிருக்கவில்லை.	ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென.	சட்டத்தின் பிரகாரம் நிறுவனத்தின் இயக்க செயற்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் வினைத்திறனை உயர்த்துவதற்காக பரிந்துரைகளை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும்

4.2 கணக்காவுன் குழு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2019 சனவரி 12 ஆம் திகதிய இலக்கம் DMA/01–2019 கொண்ட உள்ளக கணக்காய்வு வழியாட்டி மீதான சுற்றறிக்கை பிரகாரம் மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ க்குழு இஸ்தாபித்து குழுக்கூட்டம் நடாத்தியிருக்கவில்லை.	ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்காக நடைமுறை ஒழுங்கு விதியை ஆரம்பிக்க மற்றும் கூட்டுங்களை நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.3 பாதீட்டு கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை

மீளாய்வாண்டில் பிரதேச சபையின் பாதீட்டு வருமான செலவு மற்றும் உண்டையான வருமான செலவு பரீட்சிப்பின் ரோது 05 வருமான விடயங்களில் 06 சதவீதம் முதல் 62 வரையும், 07 செலவு விடயங்களில் 0.5 தசவீதம் முதல் 963 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டதில் பாதீடு நிதி வழிகாட்டியாக பயன்படுத்தவில்லையென அவதானிக்கப்பட்டது.	பதில் வழங்கப்படவில்லை.	பாதீடு நிதி வழிகாட்டியாக பயன்படுத்தப்பட வேண்டும்.

4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
2017 இன் 19 இலக்கம் கொண்ட நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் குறிக்கோள் அடைந்துக் கொள்வதற்காக தேவையான தரவுகளை சேகரித்து அதற்கு தேவையான நிதிஏற்பாடு வழங்குவதற்கு சபையினால் போதுமான நடவடிக்கை எடுத்திருக்வில்லை.	இந்த சபைக்கு காணப்படும் நிதி நிலைமை குறைவாகையால் அபிவிருத்தி வேலைத்திட்டங்களிற்கு ஒதுக்கும் அளவிற்கு போதிய நிதி எம்மிடம் இல்லை. தற்போது LDSP செயற்திட்டத்தின் கீழ் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதென.	சுற்றறிக்கை பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் குறிக்கோள் அடைந்துக் கொள்வதற்காக தேவையான தரவுகளை சேகரித்து அதனூடாக தேவையான நிதிஏற்பாடு வழங்குவதற்கு சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.